"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1975).

THE HON. THIRU O.P. RAMAN: MR. CHAIRMAN, I BEG TO MOVE—

"That the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, @ 1975 (L.A. Bill No. 7 of 1975), as passed by the Assembly, be taken into consideration."

Sir, in moving this Bill, I wish to say that there has been a widespread drought in this State and the agriculturists have borrowed money in order to tide over the crisis caused by the failure of crops. It is in the interests of the general public that, at the present time, agriculturists should be spared the distractions and expenditure involved in litigation launched by their creditors and be enabled to rehabilitate themselves in order that the maximum possible advantage may result to the State in the matter of production of food crops. In order to give temporary relief to the agriculturists, the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Ordinance, 1975, (Tamil Nadu Ordinance No. 1 of 75) was promulgated by the Government on 16th January 1975 to provide that no suit for the recovery of a debt shall be instituted and no application for the execution of a decree for payment of money passed in any such suit shall be made and no suit or application for the eviction of a tenant for non-payment of a debt shall be instituted or made against any agriculturist in any civil or revenue court before the expiry of a year from the date of the commencement of the Ordinance, i.e. 16th January 1975 and that all further proceedings in suits and applications of the nature mentioned above shall stand stayed till then. However, the benefits of the proposed legislation will not apply to persons who have been assessed to Income-tax, Agricultural Income-tax, or Sales Tax in

---

@ 55-60 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

any of the years 1971–72 or 1972–73 or 1973–74. The Bill seeks to replace the Ordinance. Sir, I request the House to accept the motion.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கடன்பட்ட விவசாயிகளுக்கான தற்காலிக நிவாரணச் சட்டத்தைப் பற்றிப் பொதுப்படையான ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தச் சட்டம் பொதுவான முறையில் நல்லதொரு சட்டம், வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தற்சமயம் கிராமங்களில் விவசாயிகள் பெருமளவில் கடன் தொல்லைகளால் அவதிப்படுகின்றார்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதான். கிட்டத்தட்ட கடந்த ஐந்தாண்டுகளாகப் பார்க்கும்போது கிராமப்புறங்களிலே வட்டிக்கடைகள் முன்பு இருந்ததைப்போல் பத்து அல்லது இருபது மடங்கிற்கு வளர்ந்துள்ள நிலைமையையும் கிராமங்களிலே உள்ளவர்களில் குறிப்பாக விவசாயிகளில் கடன் இல்லாதவர்கள் மிகமிகக் குறைவாகத்தான் இருக்கின்றார்கள் என்பதையும் பார்க்கிறோம். இன்னும் ஒன்றுகூட இருக்கின்றது. விவசாயிகளைப் பொறுத்தமட்டில், கூட்டுறவுச் சங்கங்களிலே எல்லோரும் கடன் வாங்குகின்றார்கள். ஆனால் வாங்கும் கடன்கள் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டுதான் போகின்றனவே தவிர, அவர்கள் வாங்கிய கடன் சுமை குறைந்திருப்பதாகவோ அல்லது கடன்கள் திருப்பிக் கட்டப்பட்டதாகவோ இல்லை என்ற நிலைமையையும் பார்க்கிறோம். நமது மாநிலத்தில் வறட்சிகாரணமாக விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள் அதைப் பற்றி தாவாக்கள், வழக்குகள் ஆகியவற்றைக் கோர்ட்டுகளில் போட்டால், விவசாயிகளுடைய கவனம் விவசாயத்தில் செல்லாமல் விவசாயம் பாதிக்கப்படுகின்றது, அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிவாரணச் சட்டம் கொண்டுவரப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

(பிற்பகல் 4-50)

ஆனால் மொத்தத்திலே மாநிலம் முழுவதும் வறட்சியாக இருக்கிறது என்று சொல்லப்படும்போது ஒரு சில பகுதிகள் மட்டும், அதுவும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 60, 65 கிராமங்கள் தான் வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டு, அந்தப் பகுதிகளில்தான் கூட்டுறவுக் கடன்கள் "லாங்-டர்ம்", "மீடியம்-டர்ம்" என்ற அளவிலே மாற்றப்படும் என்று சொல்லுவது எப்படி நியாயம் என்று தெரியவில்லை. இதிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது சரியாக இருக்குமானால், மாநிலம் முழுவதும்

கூட்டுறவுக் கடன்களை "மீடியம் டர்ம்" லோன் என்ற அளவிலே கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகளில் கொடுக்கலாம் என்று அவைகள் தள்ளிவைக்கப்பட வேண்டும். ஆனால் அது செய்யப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம்.

இன்னொன்று, விவசாயிகளுடைய கடன்களில், தனிப்பட்டவர்களிடம் வாங்கிய கடன்கள் மட்டுமல்லாமல், கூட்டுறவிலே வாங்கிய கடன்களும் இருக்கின்றன. வங்கிகளிடம் வாங்கிய கடன்கள் இருக்கின்றன. இந்தக் கடன்கள் மிகவும் அதிகமாக இருக்கும்போது, அவற்றையெல்லாம் அவ்வப் போது வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லுவது எப்படி நியாயம் என்று அறிந்து கொள்ள முடியவில்லை.

இன்னொன்று, உண்மையாகவே, மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்குமானால், நிலவரி, பஞ்சாயத்து யூனியன் செஸ்ஸில் மட்டும்—வறட்சிப் பகுதிகளைத் தவிர—எந்தவிதமான "ரிமிஷனும்" இல்லை. எல்லா இடங்களிலேயும் கட்டவேண்டும் என்று வைத்திருக்கிறோம். அதை மாற்றி இந்தச் சட்டத்தை மட்டும் ஏன் இப்படி வறுமாறுகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் விளக்கு வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல, தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் லெவி போட்டிருக்கி றார்கள். இந்த லெவி எதெதற்குப் போடக்கூடாது, எதெதற்குக் குறைக்க வேண்டும் என்பதெல்லாம் வறட்சிப் பகுதிகளுக்கு என்று சொல்லப்பட்டு, கிட்டத்தட்ட 50, 60 கிராமங்களில்தான் லெவியைக் குறைத்திருக்கிறார்களே தவிர, பாக்கிப் பகுதிகளில் பூராவும் இந்த லெவி வசூலிக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை—விவசாயிகளைப் பொறுத்தவரை யிலே, இரு தரப்பு விவசாயிகள் இருக்கிறார்கள். குத்தகைக்குத் தங்க ளுடைய நிலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் விவசாயிகளும் இருக்கி றார்கள். சொந்தமாகப் பண்ணை செய்யும் விவசாயிகளும் இருக்கிறார்கள். ஆனால் குத்தகைக்குக் கொடுக்கக்கூடிய விவசாயிகளைப் பொறுத்தவரையில், குத்தகை பாக்கி ஏதாவது இருந்தால், அதை வசூலிக்க முடியாத ஒரு நிலைமையை இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் உருவாக்கியிருக்கிறோம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் பொது ஸ்தாபனங்கள், கோயில்கள், தாம ஸ்தாபனங்கள், கல்லூரிகள், விடுதிகள் போன்று தஞ்சை மாவட்டத் திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் மற்ற இடங்களிலே இருக்கக் கூடிய விவசாயிகளுக்கும், அந்தக் குத்தகை வைத்திருப்போர் நெல்லைக் கொடுப்பதற்குத் தயாராக இருந்த நிலைமை பல இடங்களிலே இருந்தது. ஆனால் இந்த மாதிரிச் சட்டம் கொண்டுவந்தவுடன், சட்டம் வந்துவிட்டது என்ற காரணத்தினாலே கொடுக்க விரும்பியவர்களும் கொடுக்காது இருக்கிற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. யார் குத்தகையை, பட்ட

[1975 மார்ச் 22 [திரு. ஜி. சுவாமிநாதன்]

கடனை ஒழுங்காகக் கொடுக்கிறார்களோ அவர்கள் பைத்தியக்காரர்கள், யார் கொடுக்காமல் இருக்கிறார்களோ அவர்கள் புத்திசாலிகள் என்ற நிலைமையை இந்த மாதிரிச் சட்டத்தின்மூலம் உருவாக்குகின்ற கொள்கையை மாற்ற வேண்டுமென்று முன்னாலே சொன்னோம். இந்த மாதிரி நிலைமை உருவாகுமானால் கோயில்கள் எப்படிச் சரியாக நடக்க முடியும்? தர்மஸ்தாபனங்கள் எப்படிச் சரியாக நடக்க முடியும்? கல்லூரிகள் எப்படிச் சரியாக நடக்க முடியும்? கொடுக்கக்கூடியவர்களையும், கொடுக்க வேண்டாம் என்று சொல்வதுபோல ஒரு சட்டம்போடுவது எப்படி ஒரு சரியான சட்டமாக இருக்க முடியும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ரெவின்யூ கோர்ட்டுகள் இந்த ஆண்டு இல்லை என்ற முறையில் நீக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியைக்கூட அந்த ரெவின்யூ கோர்ட்களுக்கு இப்போது போனால்தான் அடுத்த ஆண்டு வசூல் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். முழு நிலத்தையும் குத்தகைக்குவிட்ட விவசாயிகள் அவர்கள் கொடுக்க வேண்டிய நிலவரி, பஞ்சாயத்து யூனியன் செஸ் இவைகளைக் கட்டமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஒருவருக்கு ஐந்து எக்கர், பத்து எக்கர் இருந்து அந்த ஐந்து பத்து எக்கரும் குத்தகையிலே இருக்குமானால், வருமானமே வராதபடி குத்தகை கொடுப்பவர்களையும் கொடுக்காமல் செய்துவிட்டு, அந்த சொந்தக்காரர்கள் நிலவரி, பஞ்சாயத்து யூனியன் செஸ் முதலியவற்றைக் கட்டவேண்டுமென்று சொன்னால், அவர் எப்படிக் கட்ட முடியும் என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரியான குறைகளை நீக்கி இந்தச் சட்டத்தை உருவாக்கினால், இது வரவேற்கத் தக்கதாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொண்டு, பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது வறட்சி காரணமாக விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதுபோல், இரு தரப்பு விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகள் என்றால் நிலம் இருந்தாலே அவர்கள் விவசாயிகள். மற்றபடி நிலத்தைச் சாகுபடி செய்தால், அவர்களும், விவசாயிகள். இந்தச் சட்டம் அவர்களைப் பாதுகாப்பதாகக் கூறினால்கூட, இந்த சிறு நிலச் சுவாந்தார்களுக்கு—நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியது போல—ஒரு எக்கர், இரண்டு எக்கர் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்தச் சட்டம் வந்துவிட்ட காரணத்தினாலே அந்தக் குத்தகைதாரர்கள் இந்த ஆண்டு கொடுக்க வேண்டிய குத்தகையைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளாக அவர்கள் கொடுக்காததற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்திலே சுமாராக எக்கர் ஒன்றுக்கு—தஞ்சை, திருச்சி மாவட்டத்திலே—62 ரூபாய் நில வரி வசூலிக்கப்படுகிறது. இந்த 62 ரூபாயை அவர் வேறெங்காவது

சம்பாதித்து வந்துதான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இந்தச் சட்டத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசு இதைப் பரிசீலனை செய்து இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு, அதாவது யார் யார் தங்களது நிலத்தைக் குத்தகைக்கு கொடுத்திருக்கிறார்களோ அந்த சிறு நிலச்சுவாந்தார்களுக்கு இந்த ஆண்டு வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அரசு கட்டாயம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வறட்சி ஏற்பட்டு அளவுக்கு மீறி கஷ்டப்படும் விவசாயிகளைப் பார்த்தால்தான் இம்மாதிரி ஒரு சட்டம் எவ்வளவு அவசியம் என்பது தெரியும். குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில், மற்ற ஜில்லாக்களிலும் இம்மாதிரி நிலை இருந்தாலும், குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் இரண்டு மைல், மூன்று மைல் தூரம் குடங்களை தூக்கிக் கொண்டு சென்று காடுகளிலே, இன்னும் தொலை தூரங்களிலே இருக்கும் தண்ணீரைக் கொண்டு வந்து சாப்பிட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். கடன் நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதற்காக முதலில் அவசரச் சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நம் முன்னால் இந்த மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்வளவும் தெரிந்திருந்தும் கூட, விவசாயிகளிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் வசூலிக்க வேண்டிய கடன்களை இப்பொழுது கெடுபிடி செய்து வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் எண்ணத்தைப்பற்றி நான் சந்தேகப்படவில்லை. அரசாங்கம் இதை நல்லெண்ணத்துடன் தான் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களிலும்கூட கூட்டுறவுக் கடன்களை அதிகமாக இம்சை செய்து, வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை உடனே நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு அமைச்சர் அவர்கள், கூட்டுறவு ரிஜிஸ்டிரார் அவர்கள் மூலமாகத் தாக்கீது கொடுத்து, கடன்களை வசூல் பண்ணாமல் நிறுத்தி வைக்கும்படி செய்ய வேண்டும். அதோடு, இப்படி நிறுத்தி வைக்கக்கூடிய கடனை, அடுத்த வருஷம் மழை பெய்து நல்லமுறையில் விளைந்துவிட்டால், அடுத்த வருஷக்கடனையும் சேர்த்து ஒன்றாகக் கட்ட வேண்டுமென்ற ஒரு நிலைமை வந்தால், அது மிகக் கஷ்டமாக இருக்கும். ஆகவே, அந்தக் கடனை இரண்டு, மூன்று தவணையில் ஒரு மூன்று வருஷ காலத்தில் அவர்கள் திருப்பிக் கொடுக்கும்படி செய்ய வேண்டும். அந்தச் சபையில் நிறைவேறிய ஒரு சட்டத்திற்கு யோசனைதான் சொல்கிறோம். இதைத் திருத்தமாக அந்தச் சட்டத்தில் செய்வது நன்றாக இருக்கும். அடுத்த வருஷம் விளைந்தவுடன் ஒரே நேரத்திலே கொடுங்கள் என்று கெடுபிடி செய்யாமல் மூன்று தவணைகளில் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிணறு வெட்டுவதற்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்கள் வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய் வீதம் செலுத்த வேண்டி வருகிறது. ஆனால் மாறாக, இரண்டு மூன்று தவணைகளைச் சேர்த்து அவர்கள் இரண்டாயிரம், மூன்றாயிரம் ரூபாய் என்று மொத்தமாகச் செலுத்த வேண்டுமென்று சொல்லும் போது, எவ்வளவுதான் விளைந்திருந்தாலும் கூட, அந்த விவசாயிகளுக்கு

அது கஷ்டமாகத்தான் இருக்கும். இந்த வருஷம் ஒத்திட்போடும் கடனை மூன்றாண்டுகளில் செலுத்தலாம் என்று அரசு ஒரு தாக்கீது கொடுத்தால்—அவசியமானால் ஒரு திருத்தமே கூட கொண்டுவரலாம்—நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே, பொதுவாக சட்டத்தின் நோக்கத்தைப் பாராட்டி, அரசாங்கத்தின் நோக்கத்தைப் பாராட்டி, இதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தனிப்பட்டவர்களிடத்திலிருந்து வேளாண்மையின் பொருட்டு வாங்கியிருக்கின்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதிலிருந்து தற்காலிகமாக ஓராண்டு காலத்திற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டதாகும். இங்கே பேசிய உறுப்பினர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இந்தச் சட்டத்தினுடைய குறிக்கோளோடு இதர அரசுக் கடன் வசூலையும் சேர்க்க வேண்டுமென்று சில குறிப்புகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-00).

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்தச் சட்டத்தினுடைய முக்கிய குறிக்கோள் தனிப்பட்டவர்களிடம் விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய கடனை ஓராண்டு காலத்திற்குத் தள்ளி வைப்பதாகும். அரசுக் கடனைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அரசினுடைய நோக்கம் நல்ல நோக்கம் என்பதை ஒப்புக் கொண்டார்கள். அரசு அந்த நல்ல நோக்கத்தை நிறைவேற்றும் முறைகளில் சில குறைபாடுகள் இருப்பதைப் போன்று அவர்கள் சொன்னார்கள். அரசுக் கடன்களையும், வங்கியின் மூலமாக விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களையும் தள்ளி வைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று, மூன்று மாதங்களுக்கு முன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பையொட்டி, ஏற்கெனவே அரசு ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. உதாரணமாக, "I am to invite your attention to the policy announcement made by the Hon. the Chief Minister on the floor of the House on 18—12—1974 to the effect that the collection of loan instalment by Co-operative institutions will be postponed in drought affected areas." என்று கூட்டுறவுத் துறைச் செயலாளர் அவர்களிடத்திலிருந்து பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் சில இடங்களில் வசூல் செய்துகொண்டிருக்கின்ற முறை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தச் சில இடங்களிலும் வசூல் செய்யக்கூடாது என்பதுதான் அரசின் கருத்தாகும். அது தடுக்கப்பட வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த மசோதாவில் மாநிலம் முழுவதும் வறட்சி என்று போட்டிருக்கின்றார்கள். கூட்டுறவுத் துறைச் செயலாளர் ரெஜிஸ்ட்ரார்களுக்கு வறட்சிப் பகுதிகளில் கூட்டுறவு வங்கிக் கடன் வசூலைத்

தள்ளி வைக்க வேண்டும் என்று எழுதினுர் என்று சொன்னுர்கள். எந்தப் பகுதிகளுக்கு என்று எழுதினுர்கள்? இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருப்பது உண்மையாக இருக்கும் என்றுல், மாநிலம் பூராவும் வறட்சி என்று அர்த்தம் ஆகிறது. அப்படி இருக்கும்போது ஒரு குறிப் பிட்ட பகுதியில் மட்டும் கூட்டுறவுச் சங்க கடன்களை ஒத்தி வைப்பதோ, அவற்றை மத்திய காலக் கடன்களாக மாற்ற வேண்டும் என்று சொல் வதோ எப்படி நியாயம்? அதற்கு அரசாங்கம், மத்திய அரசு மத்திய வங்கிகளைப் பொறுத்தவரை அப்படி மாற்ற ஒத்துக் கொள்ளவில்லை என்று சொல்கிறது. அப்படியாஞல் தஞ்சை போன்ற மற்ற மாவட்டங் களில் நிலவரி வசூலை ஏன் தள்ளி வைக்கக்கூடாது? பஞ்சாயத்து யூனியன் செஸ்ஸை ஏன் தள்ளி வைக்கக் கூடாது? அப்படித் தள்ளி வைக்கவில்லையாஞல், மாநிலம் பூராவும் வறட்சி என்பதை அரசு ஒத்துக் கொண்டிருப்பதாக எப்படி அர்த்தமாகும் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, நான் மாண்பு மிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதன்பேரில் என்னுடைய விடையில் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமி நாதன் அவர்கள் சொன்னதற்கும் நான் விடை சொல்லியிருக்கிறேன். இந்தச் சட்டத்தை தமிழ் நாடு முழுவதும் வறட்சி என்று கொண்டுவந்துவிட்டு வழக்கறிஞர் வாதத்தைப் போன்று, மாநிலம் முழுவதற்கும் ஏன் அப்படிக் கொண்டுவரக் கூடாது என்று கேட்பதைக் காட்டிலும், நிலைமையை நாம் புரிந்துகொண்டு இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப, அவசியம் ஏற்பட்டால் அவ்வப்போது சட்டங்கள் செய்து கொள்ளலாம். இப்போது இருக்கின்ற ரிசர்வ் பாங்கு அனுமதிப்படி எந்தெந்தப் பகுதிகளிலே வறட்சி இருக்கின்றதோ அந்தப் பகுதிகளில்தான் தள்ளி வைக்கிற அதிகார வரம்பு நமக்கு இருக்கின்றது. நமக்குள்ள அதிகார வரம்புப் படி நாம் சட்டம் செய்யலாம். அதற்கு சட்டம் செய்வதில்கூட நமக்குச் சில சிக்கல்கள் இருக்கின்றன. சட்ட இலாகாவை நாம் கலந்து கொண் டோம். செய்ய இயலாது என்ற நிலைமையில்தான் அரசு வங்கிக் கடன் களுக்கு மட்டும் தனியாக உத்தரவு போட்டிருக்கிறது. அதற்கும் ரிசர்வ் பாங்கினுடைய ஆட்சேபணை இருப்பதால், சட்டத்தில் சேர்க்க முடியவில்லை.

இதிலே இன்னென்றைச் சொன்னுர்கள். மொத்தமாகக் கொடுக்க இஷ்டப்பட்டாலும்கூட கொடுக்காமல் இருக்கின்றுர்கள் என்று குறை பாடாகச் சொன்னுர்கள். சட்டம் இருந்தாலும், கொடுக்க வேண்டும், நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று இருப்பவர்கள், கையில் பணம் இருப்பவர்கள் கொடுத்து விடத்தான் நினைப்பார்கள். கடன்கள் இருப்பதை யாரும் விரும்பமாட்டார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 3 அல்லது 4 தவணை களில் செலுத்த வகை செய்ய வேண்டும் என்று சொன்னுர்கள். தற் போதைக்கு ஓர் ஆண்டுக்கு என்று சட்டம் நிறைவேற்றியிருக்கிறேம். விஸ்தரிக்கக் முடியுமாஞல், அப்போது விஸ்தரிப்பதிலே யாருக்கும் ஆட் சேபணை இருக்க முடியாது என்ற கருத்தைத்தான் நான் இப்போது

இதையொட்டிச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய உண்மை யான குறிக்கோளை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். இதிலே கருத்து மாற்றங்கள் சில சொல்லப்பட்டிருந் தாலும், இந்தச் சட்டம் தனிப்பட்டவர்களிடம் விவசாயிகள் பெற்ற கடனுக்கு தற்காலிக நிவாரணம் என்ற அடிப்படையிலேதான் நிறைவேற்றப்பட்டு கிறது. இந்தச் சட்டத்தின் குறிக்கோளை உறுப்பினர்கள் ஏற்று நிறை வேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1975) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, முகப்புரை, நெடுந் தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1975) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத் திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1974).

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்)